OS. 100/2022

நாள். 02.04.2026

பி.வா.சா. – 1 சுசீந்தரன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1970. வாதி என் மீது என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். வாதி போட்ட வழக்கிற்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். ஆட்சேபனை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் கூறினேன் என்றால் சரிதான். வழக்கு 11 இலக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் தவிர வாதி பெயரில் வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல, வாதி பெயரில் உள்ள மற்றும் இவ்வழக்கில் சேர்க்கப்படாத சொத்து எந்த சொத்து என்றால் 1வது இலக்க சொத்திற்கு பின்புறம் அதாவது வடக்கு பார்த்து உள்ள கட்டிடம். 11 இலக்க சொத்துக்கள் தவிர வாதிக்கு 1வது இலக்க சொத்திற்கு பின்புறம் அதாவது வடக்கு புறம் சொத்துள்ளது என எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அருணா ஸ்டோர்ஸ் என்ற கடை நோட்டு புத்தகங்கள் விற்கக்கூடிய கடை என்றால் சரிதான். அருணா ஸ்டோர்ஸ் பொது குடும்ப தொழில் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு அருணா ஸ்டோர்ஸ் கடை தொழில் தவிர வேறு தொழில் இல்லை என்றால் சரிதான். அருணா ஸ்டோர்ஸ் என் மூப்பட்டான் அருணாச்சலம் செட்டியார் தொடங்கியது என்றால் சரிதான். அருணாச்சலம் செட்டியார்க்கு சீனிவாசன் செட்டியார், வேணுகோபாலன் செட்டியார் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். வேணுகோபாலன் செட்டியார்க்கு வாதி மட்டுமே வாரிசு என்றால் சரிதான். சீனிவாசன் செட்டியார் மனைவி ஜானகியம்மாள் என்றால் சரிதான். சீனிவாசன்

செட்டியார் மற்றும் ஜானகியம்மாளுக்கு மக்கள் ராமச்சந்திரன், எனது தகப்பனார் கோவிந்தராஜன், கஸ்தூரியம்மாள், அனுசியாம்மாள், தாயாரம்மாள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் ஆனந்தவள்ளி என்றால் சரிதான். சீனிவாசன் செட்டியார் மகன் கோவிந்தராஜனுக்கும் ஆனந்தவள்ளிக்கும் பிறந்த மகன் நான் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதரரிகள் நிர்மலா, உமா, மைதிலி என்றால் சரிதான். எனது மனைவி பெயர் சுதா என்றால் சரிதான். எனக்கு இரண்டு மக்கள் என்றால் சரிதான். மகன் பெயர் வெற்றி அருண், மகள் பெயர் அபிராமி ஸ்ரீ என்றால் சரிதான். அருணாச்சலம் செட்டியார் மகன் சீனிவாசன் செட்டியார், வாதியின் தகப்பனார் வேணுகோபாலன் செட்டியார், சீனிவாசன் செட்டியார் மகன் ராமச்சந்திரன், என் தகப்பனார் கோவிந்தராஜன், வாதி ரங்கராஜன் அனைவரும் சேர்ந்து 06.10.1983 ம் வருடம் பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தினை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பாகபத்திரத்தில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல . மேற்படி பாக பத்திரத்தில் அருணா ஸ்டோர்ஸ் பொது குடும்ப தொழில் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தில் மேற்சொன்ன 5 நபர்களும் இந்து பொது குடும்பத்தை சேர்ந்தவர்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் பூர்வீக வீடு, காட்டூரணி, கொல்லை, அருணா ஸ்டோர்ஸ் ஆகிய சொத்துக்களை பிரித்து கொள்வது சம்மந்தமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் அனைத்தும் அருணா ஸ்டோர்ஸ் தொழிலிருந்து கிடைக்கப்பட்ட வருமானத்தை கொண்டு நம்மில் 1ம் நபரான சீனிவாசன் செட்டியார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என வா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக பத்திரத்தில் ஏ அட்டவனை சொத்தான பேராவூர் காட்டூரணி கட்டுப்பட்டசொத்து 1ம் நபரான சீனிவாசன் செட்டியார்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாக பத்திரத்தில் பி அட்டவனை சொத்தான ரூ.15000/-

ராமச்சந்திரன் செட்டியார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ராமச்சந்திரனுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக சொன்னார்கள். 1983 பாக பத்திரத்தில் அருணா ஸ்டோர்ஸ் சி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டு எனது தகப்பனாருக்கும் வாதி ரங்கராஜனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அருணா ஸ்டோர்ஸ் 1983 ம் ஆண்டு ஏற்பட்ட பாக பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1983 ம் ஆண்டு பாக பத்திரத்தில் டி அட்டவணை சொத்தான மோர் கடைத் தெருவில் உள்ள வீடு எனது தகப்பனார் கோவிந்தராஜனுக்கும் வாதியின் தகப்பனார் வேணுகோபாலன் செட்டியாருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோர் கடை சொத்து தாவா வழக்கில் 6 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 6 அயிட்ட சொத்தின் மொத்த சதுர அடி 4,615 என்றால் தெரியாது. மேற்படி 6 அயிட்ட சொத்தில் தற்போது வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1983 ம் ஆண்டு பாக பத்திரத்தில் இதுவரை தொழில் செய்து வந்த அருணா ஸ்டோர் சீனிவாச செட்டியாரிடமிருந்து எனது தகப்பனார் கோவிந்தராஜன் மற்றும் வாதி ரங்கராஜனுக்கு மாற்றிக்கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 1983 க்கு பிறகு அருணா ஸ்டோர்ஸ் –ல் எனது தகப்பனார் கோவிந்தராஜனும் மற்றும் வாதி ரங்கராஜனும் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான், வாதி ரங்கராஜன் எனது தகப்பனாருக்கு உறுதுணையாக வந்தார். வாதி ரங்கராஜன் உறுதுணையாக வந்தார் என்றால் எதனடிப்படையில் என்றால் பார்ட்னராக வந்தார். 1983 க்கு பின்பு எனது தகப்பனார் மற்றும் வாதி ரங்கராஜன் பெயரில் தொழில் வரி, விற்பனை வரி அனைத்தும் அருணா ஸ்டோர்ஸ்க்கு இருந்து வருகிறது என்றால் சரிதான். 1983 ம் ஆண்டு நடந்த விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் நான் படித்து கொண்டு இருந்ததால் தெரியாது, எனக்கு எப்போது விவரம் தெரிந்தது என்றால் நான் 18 வயதில் கடைக்கு வந்தபோது தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 1 வது நபராக கையெழுத்து செய்துள்ள நபரின் கையெழுத்து என் தகப்பனார் கையெழுத்து என்றால்

சரிதான். சாட்சியிடம் காட்டப்படும் ஆவணம் அவரின் தகப்பனாரும் வாதியும் 01.04.1992 ம் தேதியில் செய்து கொண்டதாக சொல்லப்படும் கூட்டு வியாபார உடன்படிக்கை பத்திரம். அந்த உடன்படிக்கை பத்திரத்தில் சாட்சி அவரது தகப்பனார் கையெழுத்து என ஒப்புக்கொண்ட 6 கையெழுத்துக்கள் மட்டும் **வா.சா.ஆ. 27 .** நானும் வாதி ரங்கராஜனும் அருணா ஸ்டோர்ஸ் கடை நடத்துவது சம்மந்தமாகவும் அதில் வரும் லாப நஷ்டங்களை பிரித்து கொள்வது சம்மந்தமாகவும் 2 உடன்படிக்கை பத்திரம் போட்டுள்ளதாக தானாக தெரிவித்தார். அந்த உடன்படிக்கை பத்திரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் அதனை தாக்கல் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார். நானும் வாதியும் செய்துக் கொண்டதாக சொல்லப்படும் உடன்படிக்கை 2004 ம் ஆண்டிற்கு பின்பு என்றால் ஞாபகமில்லை. என் தகப்பனார் 2004 ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் ஸ்தானத்தில் என் தகப்பனார் 2004 ம் ஆண்டு இறந்த பிறகு அருணா ஸ்டோர்ஸ் கடைக்கு வந்தேன் என்றால் சரிதான். 2004 ம் ஆண்டு வரையிலும் என் தகப்பனாருக்கு குடிப்பழக்கம் இருந்ததால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு தினமும் கடைக்கு வர இயலாத நிலையில் இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் உடல்நிலை 2003 ம் ஆண்டு மோசமாகிவிட்டதாலும் நானும் படிப்பை கைவிட்டதாலும் வாதி தான் கடைத்தொழிலுக்கு என்னை கூப்பிட்டார் என்றால் சரியல்ல. தாவா 2 வது இலக்க சொத்தினை யார் கிரையம் வாங்கியது என்றால் என் தகப்பனார் கோவிந்தராஜன். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் ஞாபகமில்லை. எனது தகப்பனார் வாங்கிய கிரையப்பத்திரத்தின் அசல் என்வசம் உள்ளதா அல்லது வாதியிடம் உள்ளதா என்றால் வாதி தரப்பில் 2 வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ராமநாதன் வசம் உள்ளது. ராமநாதன் வசம் எப்போது அசல் பத்திரம் போனது என்றால் எனக்கும் வாதிக்கும் பஞ்சாயத்து நடந்தபோது சென்றது. தாவா 3 வது இலக்க சொத்து மோர் கடை தெருவில் உள்ள வீடு என்றால் சரிதான். அந்த சொத்து எனது தகப்பனாரும் வாதியும் 20.01.1986 ல் சேர்ந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த சொத்தில் தான் நான் தற்போது வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.